கிட்டலின் கைகள்

எழுத்து: எரிகா சில்வர்மேன்
படம்: டாப்ரா லாட்டிமோர்
மொழிபெயர்ப்பு: பூர்வ யாக்னிக் குஷ்வாஹா





கிட்டலின் கைகள்

எழுத்து: எரிகா சில்வர்மேன்
படம்: **டெபோரா நர்ஸ் லாட்டிமோர்**

மொழிபெயர்ப்பு: பூர்வா யாக்னிக் குஷ்வாஹா



என் தந்தை ஹரோல்டு மற்றும் என் தாத்தாவின் அன்பு நினைவில் - - இ.எஸ்.

இந்தக் கதையை விளக்குவதற்கு எனக்கு வாய்ப்பளித்த அழகான கைகளும் இதயமும் கொண்ட எரிகாவுக்கும் , அன்புடனும் நன்றியுடனும் போனி மற்றும் ஜலீனுக்கும்

- டிஎன்.எல்





நீண்ட காலத்திற்கு முன்பு, நீர்தூக்கி யாக்கோவ் என்ற ஒருவர் இருந்தார். அவர் தனது மகள் கிட்டலுடன் கார்பேத்தியன் மலைகளின் அடிவாரத்தில் அமைந்துள்ள ஒரு சிறிய கிராமத்தில் ஒரு சிறிய வீட்டில் வசித்து வந்தார். யாக்கோவ் பேசுவதை விரும்பினார். மேலும் கிட்டல் ஒரு நல்ல மகள் என்பதால் , அவர் பேசுவதை அவளுக்கு எப்படி கவனிப்பது என்பது தெரியும்.

சமைக்கும்போதும் கேக் மற்றும் ரொட்டிகள் சுடும்போதும் , நூல் பின்னல் வேலை மற்றும் தையல் வேலைகளைச் செய்யும்போதும் தன் தந்தை சொல்வதைக் கேட்பாள் . அவள் எப்போதும் தன் கைகளால் வேலை செய்து கொண்டிருப்பாள் . கந்தல் மற்றும் ஓட்டை உடைசல்களிலிருந்து ஆதரவற்றோருக்கு பொம்மைகளும், பிச்சைக்காரர்களுக்கு கழுத்துக்குட்டைகளும் அவள் செய்தாள் .





அவளுடைய தந்தையின் பார்வையில், அவள் செய்த அனைத்தும் ஒரு அதிசயம். நீர்தூக்கி யாக்கோவ் , தான் சந்தித்த அனைவரிடமும் தனது மகளைப் புகழ்ந்து பெருமை பேசுவார்.

" என் மகள் எனக்கு எலியா தீர்க்கதரிசிக்கு ஏற்ற ஒரு அழகான பிரார்த்தனை சால்வையைச் செய்தாள் , " என்று யாக்கோப் செருப்பு தைப்பவரிடம் கூறினார்.

"கிட்டலின் கன்னங்கள் வெட்கத்தால் சிவந்தன. "அப்பா , இது ஒரு எளிய சால்வை தான்," என்று அவள் மெதுவாக சொன்னாள்.

" அவள் செய்யும் சேமியா புட்டிங் சொர்க்கத்தைப் போல சுவையாக இருக்கும் " என்று யாக்கோவ் இறகு பறிப்பவரிடம் சொன்னார்.

“அது ஒரு சாதாரணமான நூடுல் புட்டிங் தான்” என்று கிட்டல் கண்களைத் தாழ்த்தினாள்.

யாக்கோவ் குனிந்து ரப்பியின் மனைவியை வரவேற்று,"என் கிட்டலின் கைவினைப் படைப்பை பார்த்தீர்களா ?" என்று கேட்டார் .

" அப்பா, தயவு செய்து," என்று கிட்டல் முணுமுணுத்தாள்.

யாக்கோப் தன் குரலை உயர்த்தி , " அவள் செய்ததைப் போன்ற மெழுகுவர்த்திகளை நீங்கள் இதற்கு முன்பு பார்த்திருக்கமாட்டீர்கள் " என்றார்.

ரப்பியின் மனைவி புருவங்களை சுருக்கிக்கொண்டு ,"இவ்வளவு தற்பெருமை வேண்டாம் ரேப் யாக்கோவ், தற்பெருமை துரதிஷ்டங்களை உண்டாக்கும் என்று உங்களுக்குத் தெரியாதா?” என்று கேட்டார். “யார் பெருமை கூறுகிறார்கள்? நான் சொல்லும் ஒவ்வொரு வார்த்தையும் உண்மை” என்று யாக்கோவ் கூறினார். ரப்பியின் மனைவி விரலை அசைத்து எச்சரித்தாள். " பேசும் வார்த்தைகள் தீய ஆவிகள் போல. அவை நம்மை சுற்றி திரிந்து பலவிதமான சங்கடங்களையும், துன்பங்களையும் உருவாக்கும் . யாக்கோவ் சிரித்தபடி, “என்ன ஒரு முட்டாள்த்தனம்! சொற்களுக்கு நான் அஞ்சுவது இல்லை என்று கூறினார்.



அந்த வருடம், குளிர்காலம் நீடித்தது. பனி தரையிலேயே ஒட்டிக்கொண்டே இருந்தது, ஆனால் கிட்டல் பாஸோவர் என்ற வசந்தகாலக் கொண்டாட்டத்திற்கு தயார் செய்யத் தொடங்கினாள். தன் கழுத்துக் கச்சை அணிந்தபோதும் அவள் நடுங்கிக்கொண்டே, அவள் சுவர்களை கழுவினாள். பாஸோவரில் மட்டுமே பயன்படுத்தப்படும் சிறப்பு தட்டுகள், பாத்திரங்கள் மற்றும் சமையல் சாதனங்களை அவள் சுத்தம் செய்தாள்..அவள் மாட்சோவுக்கான மாவை தயாரித்து, அதை பேக்கரின் அடுப்புக்கு கொண்டு சென்றாள்.



ஒரு நாள், அவள் மட்ஸோவை மூடுவதற்கு ஒரு கைக்குட்டையை பின்னிக்கொண்டிருந்தபோது, அவளுடைய தந்தை மதிய உணவிற்கு வீட்டிற்கு வந்தார்.

“குளிர்காலத்தில் வைக்கோல் எல்லாம் தீர்ந்துவிட்டது ," என்று அவர் சோகமாக கூறினார். "மேலும் வைக்கோல் வியாபாரி முந்தைய கடனுக்கு நாற்பது ரூபிள் கேட்கிறார் , அதை நான் இன்னும் செலுத்தவில்லை."

" வேறு ஏதாவது வழியில் நாம் அவருக்குக் கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாதா ? ஆப்பிள் விற்பனையாளர் ஒருமுறை உங்களுக்கு ஆப்பிள்களை பதிலுக்குக் கொடுத்தாரே," என்று கிட்டல் மிகவும் எளிமையான வீட்டைச் சுற்றிப் பார்த்துக்கொண்டே கூறினாள்.

யாக்கோவ் தலை குனிந்தார். "ரெப் ராயாவுக்கு என்ன தேவை ? தண்ணீர் ? அவருக்கோ சொந்தமாக கிணறு இருக்கிறது." திடீரென்று அவர் கண்கள் பிரகாசித்தன. "என்னுடன் வா மகளே என்று கூறி கிட்டலை தன்னுடன் அழைத்து சென்றார்."

யாக்கோவ் தனது குதிரையை வண்டியுடன் இணைத்து, கிட்டலை ரெப் ராயா என்கிற பெரிய வைக்கோல் வணிகரின் அழகான இல்லத்துக்கு அழைத்துச் சென்றார்.

“அமைதியாக இரு,” நான் பேசிக்கொள்கிறேன்,” என்று ஆணையிட்டார்.

ரெப் ராயா கதவைத் திறந்தார்.

“வணக்கம், ரெப் ராயா,” என்று யாக்கோவ் கூறினார். “என் மகளின் கைகளின் அற்புதத்தை நீங்கள் பார்த்தவுடன், அவளை உங்களுக்காகத் தையல் வேலை செய்ய வைப்பதில் நீங்கள் மகிழ்வீர்கள். இப்படி செய்தால் எங்களின் வைக்கோல் கடனை நாங்கள் திரும்ப செலுத்தலாம் .”

“நான் ஏற்கனவே ஒரு மிகத் திறமையான தையற்காரியை வேலைக்கு வைத்துள்ளேன்,” என்று ரெப் ராயா பதிலளித்தார்.



“ஆனால் கிட்டல் அதை விட மிகச் சிறந்தவள் ,” என்று யாக்கோவ் பிடிவாதமாகச் சொன்னார் "அவள் வெறும் கந்தல் மற்றும் நூலைப் பயன்படுத்தி ஒரு அற்புதமான மேட்ஸோ கைக்குட்டையைச் செய்ய முடியும்."

" , அப்பா , வேண்டாம்!" என்று கிட்டல் தனக்குள் நினைத்துக் கொண்டு, தன் தந்தையின் சட்டையைப் பற்றி இழுத்தாள்.

ஆனால் ஒருமுறை பேசிவிட்டால், பேசும் வார்த்தைகள் தீய ஆவிகள் போல. அவை நம்மை சுற்றி திரிந்து பலவிதமான சங்கடங்களையும், துன்பங்களையும் உருவாக்குகின்றன.

“மிகச் சிறந்தவளா?” என்று வைக்கோல் வியாபாரி கேட்டார். “நீ கூறுவது உண்மை எனில், உன் மகள் நிச்சயமாக எனக்காக வேலை செய்யலாம். அது இல்லை எனில், நான் உன் மரத்தால் ஆன தொட்டியை எடுத்துக்கொள்வேன். அதனால் என் வைக்கோலின் ஒரு பகுதி பணம் செலுத்தப்பட்டதாகும்..”





ரெப் ராயா கிட்டலை வரவேற்பறைக்குக் கூட்டிச்சென்றார். அவர் அவளுக்கு ஒரு துணித்துண்டும் ஒரு நூல்கண்டும் கொடுத்தார். "ஒரு மணிநேரத்தில் திரும்பி வருகிறேன்," என்றார்.

"தயவு செய்து... எனக்கு ஒரு தையல் ஊசி கிடைக்குமா?" என்று கேட்டாள்.

"உன் தந்தை ஊசிகள் பற்றி ஒன்றும் சொல்லவில்லை," என்று அவர் பதிலளித்தார்; பின்னர் அவர் கதவை பூட்டிவிட்டார்.

கிட்டல் அறை முழுவதும் தேடினாள், ஆனால் எங்கும் ஊசியைக் கண்டுபிடிக்க முடியவில்லை. அப்போது, சிம்னியிலிருந்து சிறகுகளை அடிப்பதன் சத்தம் அவளை திடுக்கிட வைத்தது. அவள் மேலே பார்த்த போது, ஒரு புறா சிக்கிக் கொண்டிருப்பதைக் கண்டாள். அவள் கையை உள்ளே நுழைத்து மெதுவாக அதை வெளியே எடுத்தாள்.

நடுக்கத்துடன், அந்தப் புறா தனது எண்ணெய் படிந்த இறகுகளை சுத்தம் செய்யவேண்டி கொத்திக்கொண்டது..

" புறாவே," "எனக்கு ஊசி இல்லாமல் மேட்சோ துணியை தைக்க முடியாது, ஆனால் குறைந்தது உனக்கு உதவ முடியும்." என்று கூறி,சாம்பல் மற்றும் புகையால் மூடப்பட்டிருந்த புறாவின் இறக்கைகளை அவள் ஒரு துணியால் துடைத்தாள்.

பின்னர் ஒரு ஜன்னலைத் திறந்து புறாவை வெளியே பறக்க விட்டாள். புறா பறந்து சென்றதும், கிட்டல் முற்றத்தில் யாரோ இருப்பதை உணர்ந்தாள். "வெளியே யார்?" என்று தனக்குள் நினைத்துக் கொண்டாள்.



திடீரென்று கதவு திறந்தது. யாக்கோவ் பின்தொடர உள்ளே ரெப் ராயா வேகமாக நடந்து வந்தார்.

“ஆஹா! நான் நினைத்ததுபோலத்தான்,” என்று ரெப் ராயா சொன்னார். “மே ட்சோ துணி இல்லை! இப்போது அந்தத் தொட்டி எனக்குத்தான் .”

“இது எப்படி சாத்தியம்?” என்று யாக்கோவ் கத்தினார்.

“அப்பா, நான் விளக்குகிறேன்!” என்று கிட்டல் வேண்டிக் கொண்டாள்.

“ஷு ! அமைதியாக இரு! இதை நானே பார்த்துக்கொள்கிறேன் என்றார்

அவர் ரெப் ராயாவை நோக்கி திரும்பினார்.

“தையல் பற்றி விடுங்கள். என் மகள் நன்றாக சமையல் செய்வாள் !”

ரெப் ராயா கண்களை உருட்டியபடி . “என்னிடம் நகரத்திலேயே சிறந்த சமையல்காரர் இருக்கிறார் என்று கூறினார்





" கிட்டல் அதை விட நன்றாக சமைப்பாள்," யாக்கோவ் நம்பிக்கையுடன் கூறினார். "வீட்டில் எஞ்சியிருக்கும் பொருட்களைக் கொண்டு அவள் ஒரு பண்டிகை விருந்து வைக்க முடியும்."

கிட்டல் தன் தந்தையின் தோளில் தட்டினாள். அவள் "அப்பா..." என்று கிசுகிசுத்தாள். ஆனால் ஒருமுறை பேசிவிட்டால், பேசப்படும் வார்த்தைகள் தீய ஆவிகள் போல. அவை நம்மை சுற்றி திரிந்து பலவிதமான சங்கடங்களையும், துன்பங்களையும் உருவாக்குகின்றன

“ நீங்கள் சொல்வதை உங்கள் மகளால செய்ய முடியவில்லை என்றால் , நான் உங்கள் வண்டியை எடுத்துக்கொள்வேன். அது உங்க கடனை கொஞ்சம் தீர்க்கும் என்று கூறினார் "



சமையலறையில், ரெப் ராயா, கிட்டலுக்கு ஒரு முட்டை , அரை கப் பால் மற்றும் சிறிது பாலடைக்கட்டி கொடுத்தார். பின்னர் அவர் தனது அலமாரியை பூட்டிவிட்டு , " நான் ஒரு மணி நேரத்தில் திரும்பி வருவேன் என்று சொன்னார் "

" சமைக்க எனக்கு கொஞ்சம் விறகு கொடுங்கள் ," என்று கிட்டல் கேட்டார்.

“உன் தந்தை விறகு பற்றி எதுவும் சொல்லவில்லை ." என்று சமையலறைக் கதவை மூடிவிட்டு நடந்து சென்றார்.

விறகைத் தேடிக் கொண்டிருந்த கிட்டல், ஓர் முனகலான சத்தத்தைக் கேட்டாள். குச்சியைப் போல ஒல்லியான ஒரு பூனை, ஜன்னல் மீது ஏறியது.



“சிறிய பூனையே, எனக்கு விறகு இல்லாமல் சமைக்க முடியாது,” என்று அவள் சொன்னாள். “ஆனால் குறைந்த பட்சம் உனக்கு நான் உணவு அளிக்க முடியும்.”

அவள் பாலடைக்கட்டி, பால் மற்றும் முட்டையை பூனையின் முன் வைத்து அது உண்ணுவதைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

கிட்டல் வெளியில் எங்கிருந்தோ காலடிச் சத்தம் கேட்டாள். அவளது கண்கள் முற்றத்தில் தேடின.

“யாரோ வெளியே இருக்கிறார்கள்,” என்று பூனைக்குச் சொன்னாள்.

பூனை தனது பச்சை கண்களைகொண்டு அவளைப் பார்த்து மினுக்கியது.



அந்த நேரத்தில், யாக்கோவ் பின்தொடர , ரெப் ராயா சமையலறைக் கதவைத் திறந்தார்,

" நான் நினைத்தது போலவே!" என்றார் வைக்கோல் வியாபாரி. "வண்டி என்னுடையது."

யாக்கோவ் அவர் பின்னால் ஓடினார். "தயவுசெய்து எங்களுக்கு இன்னொரு வாய்ப்பு கொடுங்கள்."

" அப்பா, நான் தெளிவுபடுத்துகிறேன் ," என்றார் கிட்டல்.

" நீ அமைதியாக இருக்க வேண்டிய நேரம் இது."

யாக்கோவ், ரெப் ராயாவிடம் திரும்பினார். "அவள் சமையல் செய்வதில் வல்லவளாக இல்லாமல் இருக்கலாம். ஆனால் என்னுடைய கிட்டல் மிக அழகான கோப்பைகள் , தட்டுகள் மற்றும் மெழுகுவர்த்திகளை தயாரிக்க முடியும்." உண்மையில், அவளிடம் வெள்ளி இருந்தால், எலியாவின் வெள்ளிக் கோப்பையைக் கூட செய்ய முடியும்!"

" அப்பா , தயவு ..." என்று கிட்டல் மெதுவாக சொன்னாள். ஆனால் பேசப்படும் வார்த்தைகள் தீய ஆவிகள் போல. அவை நம்மை சுற்றி திரிந்து பலவிதமான சங்கடங்களையும், துன்பங்களையும் உருவாக்குகின்றன.

. " சரி ," ரெப் ராயா விரைவாகச் சொன்னார். "கிட்டல் நீங்கள் சொல்வதைச் செய்ய முடிந்தால் , நிச்சயமாக அவள் எனக்காக வேலை செய்யலாம். ஆனால் அவளால் முடியாவிட்டால், உன் குதிரை என்னுடையதாகிவிடும், உன் கடன்கள் அனைத்தும் அடைக்கப்படும்."



ரெப் ராயா கிட்டலை தனது நிலவறைக்கு ழைத்துச் சென்று ஒரு வெள்ளி நாணயத்தைக் கொடுத்தார். "சூரியன் மறையும் வரை உனக்கு நேரம் இருக்கிறது."

, பீப்பாய்கள் இல்லாமல், குதிரை இல்லாமல், என் தந்தைக்கு எதுவும் மிச்சமில்லை. நான் அவருக்கு உதவ முடிந்தால் நல்லது" என்று கிட்டல் நிலவறையில் முன்னும் பின்னுமாக நடந்து கொண்டிருந்தாள். இதை நினைத்துக்கொண்டு, அவள் ஜன்னலுக்கு வெளியே பார்த்தாள். திடீரென்று, முற்றத்தின் நிழல்களிலிருந்து ஒரு பிச்சைக்காரன்குளிரினால் நடுங்கியபடியே வெளிப்பட்டான்.





" என்னால் என் அப்பாவுக்குத்தான் உதவ முடியாது ," என்று கிட்டல் கூறினாள். "ஆனால் நான் உங்களுக்கு கொஞ்சம் வெதுவெதுப்பை கொடுக்க முடியும்." அவள் பிச்சைக்காரனுக்கு தன் சால்வையைக் கொடுத்தாள்.

அந்தப் பிச்சைக்காரன் சால்வையை எடுத்துக் கொண்டான். பிறகு தன கை அசைவின் மூலம்...



நிலவறையில் அறையில் அவன் அவளுக்கு முன்னால் நின்று கொண்டிருந்தான். பச்சைகண்களை கொண்ட பூனை அவன் கால்களை சுற்றியது. புறா ஒன்று அவன் தோளில் வந்தமர்ந்தது. சட்டென்று ஒரு வேலைமேசை அங்கு தோன்றியது.. கருவிகளும், பரிசுத்தமான வெள்ளி கட்டிகளும் தோன்றின. அடுப்பங்கரையிலிருந்து நெருப்பின் ஜ்வாளை கிளம்பியது...



வெளியே சூரியன் தன் பயணத்தை நிறுத்தியது.. பிச்சைக்காரன் கிட்டலுக்கு எவ்வாறு மெழுகு குச்சிகளும் பீங்கான் தட்டுகளும் தயாரிப்பதென்று காண்பித்தான். அவள் அந்த அற்புதமான எலியாவின் கோப்பையை தயாரித்ததை அமைதியான ஆமோதிப்பு கொண்ட முகத்தோடு பார்த்து கொண்டிருந்தான்.

கிட்டலின் கண்களை பிச்சைக்காரன் ஆழமாக நோக்கினான். அப்படியான ஒரு கருணையை அவள் அதுநாள் வரையில் கண்டதேயில்லை. பின்னர்தான் எலியா என்ற ஞானியின் முன் தான் நின்று கொண்டிருப்பதை அவள் அறிந்துகொண்டாள். அவளுக்கு நடுக்கம் வந்தது. "எவ்வாறு நான் உங்களுக்கு என் நன்றியை கூறிடுவேன்?" அவள் முணுமுணுத்தாள்.



எலியா புன்னகை புரிந்தார். “உன் கைகளின் செயலால், உன் இதயத்தின் நற்குணத்தால், உன் வார்த்தைகளின் ஞானத்தால்.” என்று கூறி அவர் மறைந்தார். அவர் நின்றிருந்த இடத்தில் காற்று மின்னியது. நெருப்புத் துண்டில் ஒரு வெள்ளி நாணயம் கிடந்தது.



வெளியில், சூரியன் மலைகளின் பின்னால் மறைந்தது. நிலவறையின் கதவு திறந்தது. யாக்கோவ் பின்தொடர ரெப் ராயா வேகமாக உள்ளே வந்தார். ரெப் ராயாவின் கண்கள் ஆச்சரியத்தால் விரிந்தன. யாக்கோவும் தனது மகள் உருவாக்கிய அழகான பொருள்களை ஆச்சரியத்துடன் பார்த்தார் .“நான் சொன்னேன் அல்லவா , என் மகள் திறமைசாலி என்று ….”





“உன் மகள் எனக்காக வேலை செய்யலாம்,” என்று ரெப் ராயா சொன்னார். “இன்றிலிருந்தே ஆரம்பம்! அவள் வெள்ளிப் பொருட்களைத் தயாரிப்பாள், நான் அவற்றை விற்கிறேன்.”அவர் தனது கைகளை முன்னே நீட்டி யாக்கோவின் கைகளை குலுக்க முனைந்தார். “என் மகள் உங்களுக்காக வேலை செய்வதில் மகிழ்ச்சி அடைவாள்!” “அப்பா, நிறுத்துங்கள்!” என்று கிட்டல் கத்தினாள். அவள் அவர்களின் நடுவே வந்தாள்.“நான் இதுவரை நீங்கள் கூறியதை நன்றாகக் கேட்டுக்கொண்டிருந்தேன். இப்போது, உங்கள் அனுமதியுடன், நான் பேசுகிறேன்.”



யாக்கோவ் தனது மகளைக் முறைத்துப் பார்த்தார் . "எனக்கு தைக்க ஊசியும் இல்லை, சமைக்க விறகும் இல்லை என்பதால்,"இவர் உங்களின் பீப்பாயையும், வண்டியையும் ஏமாற்றி எடுத்துக்கொண்டார். நான் ஒருபோதும் அவருக்காக வேலை செய்ய மாட்டேன்."

அவள் தான் செய்து வைத்திருந்த அனைத்தையும் எடுத்துக் கொண்டு வெளியே சென்றாள். யாக்கோவும் பின்தொடர்ந்தார்.

"தயவு செய்து நில்லுங்கள்! " என்று கூவிகொண்டே வைக்கோல் வியாபாரி அவர்களை நோக்கி ஓடிவந்தார். "உன் பீப்பாயையும், வண்டியையும் நீயே வைத்துக்கொள் . மேலும், உன் குதிரைக்காக கொஞ்சம் வைக்கோலும் தருகிறேன் என்றார் ."



"என் பிரியமுள்ள ரெப் யாக்கோவ்," என்று அவர் அழைத்தார் . "நீங்கள் அந்தப் பெண்ணின் தந்தை. அவள் எனக்காக வேலை செய்ய வேண்டும் என்று அவளுக்குச் சொல்லுங்கள் என்றார் ."யாக்கோவ் பெருமையாக புன்னகைத்தார். "என் மகளுக்குத் தானே பதிலளிக்கத் தெரியும். அதை அவள் மற்றவர்களைவிட மிகச் சிறப்பாகச் செய்கிறாள்." என்று பதிலளித்தார்





அந்த நேரத்திலிருந்து, கிட்டலின் கைகளின் நுணுக்கமான பணியைப் பாராட்ட மக்கள் பல மைல் தூரத்திலிருந்து வந்தனர். அவர்கள் அவள் அழகாக வடிவமைத்த மெழுகுவர்த்திகள் , சேடர் தட்டுகள், குறிப்பாக அவளது நேர்த்தியான எலியாவின் கோப்பையை வாங்கிக் கொண்டனர். எலியாவே அவளின் ஆசானாக இருந்தார் என்று கிசுகிசுக்கப்பட்டு வந்தது. ஆனால் அதை நீங்கள் மீண்டும் சொல்லாதீர்கள். ஏனெனில், பேசப்படும் வார்த்தைகள் தீய ஆவிகள் போல. அவை நம்மை சுற்றி திரிந்து பலவிதமான சங்கடங்களையும், துன்பங்களையும் உருவாக்குகின்றன.

கதையிலிருந்து சில வார்த்தைகள்

பாஸ்ஓவர் - எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து யூதர்கள் தப்பித்ததை நினைவுகூரும் ஒரு வசந்த விழா.

டிப்புக் - ஒரு பேய் போன்ற தீய ஆவி.

மேட்ஸோ - பாஸ்ஓவரின் போது உண்ணப்படும் புளிப்பில்லாத பிளாட்பிரெட்.

மேட்ஸோ கைக்குட்டை –மேட்ஸோவை மூடுவதற்காக எம்பிராய்டரி செய்யப்பட்ட கைக்குட்டை.

எலியா - யூத நாட்டுப்புறக் கதைகளில், எலியா ஒரு கனிவான மற்றும் மாயாஜால தீர்க்கதரிசி, அவர் ஏழைகளுக்கும் கருணை உள்ளம் கொண்டவர்களுக்கும் கஷ்ட காலங்களில் உதவுகிறார்.

எலியாவின் கோப்பை - பொதுவாக வெள்ளியால் செய்யப்பட்ட ஒரு சிறப்பு கோப்பை, தீர்க்கதரிசி எலியாவுக்கு மது வைக்கப் பயன்படுகிறது. பாஸ்ஓவர் உணவின் போது, தீர்க்கதரிசி எலியாவை உள்ளே அழைக்க வீட்டில் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் ஒரு கதவு திறக்கப்படுகிறது.

சேடர் – பாஸ்ஓவர் உணவு, இதன் போது பாஸ்ஓவர் கதை வாசிக்கப்பட்டு , பாடப்பட்டு, பிரார்த்தனை செய்யப்படுகிறது.

சேடர் தட்டு - விருந்துக்கான உணவைக் கொண்ட ஒரு வடிவிலான செதுக்கப்பட்ட தட்டு , அடிமைத்தனத்தின் துன்பத்தையும் சுதந்திரத்தின் மகிழ்ச்சியையும் மக்களுக்கு நினைவூட்டுகிறது.



ஒரு சிறிய போலந்து கிராமத்தில், கிட்டல் என்ற டீனேஜ் பெண், தனது தந்தை பெருமையாகப் பேசிய பிறகு, சாத்தியமற்ற ஒரு பணியைச் செய்யும்படி கேட்கப்படுகிறாள். கிட்டல் ஏமாற்றத்தை எதிர்கொண்டாலும் , அவளுடைய கருணை மற்றும் நற்செயல்களுக்கு எலியா தீர்க்கதரிசி வெகுமதி அளிக்கிறார்.